05.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205 /2018</u>

அ.சா.21

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஉஷ்குமார் | | |
| த/பெ | குருசாமி | | |
| கிராமம் | ஈ.பி காலாணி | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 47 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் ரயில்வே ஸ்டேஷன் ஆட்டோ நிறுத்தத்தில் ஆட்டோ டிரைவராக பணி செய்து வருகிறேன். என்னுடைய பேட்ச் எண்.18251 ஆகும். நாள் 11.05.1998 ஆகும் . என் ஆட்டோ பதிவு எண்.TN32 AC0199 ஆகும். விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்திற்கு எதிரில் தான் எங்கள் ஆட்டோ நிறுத்தம் உள்ளது. சம்பவம் நடந்து சுமார் 10 வருடம் இருக்கும். 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இருப்பு பாதை காவல் நிலையத்தினர் என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டேன். அது காவல் நிலையத்தில் லாக்கப்பிலிருந்த ஒருவர் மருத்துவமனைக்கு சென்று இறந்துவிட்டது சம்மந்தமாக தான் கையெழுத்து போட்டேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. நான் ஆட்டோ நிறுத்தத்தில் இருந்துபோது காவல் நிலையத்திலிருந்து எதாவது சத்தம் வந்ததா என்றால் எனக்கு எதுவும் தெரியாது. மற்ற ஆட்டோ ஓட்டுனர்கள் சொன்னதை வைத்து எனக்கு தெரியும். இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். என்னுடன் மணிகண்டன் என்பவரையும் விசாரணை செய்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 06.05.2014ந் தேதி இரவு 8.30 மணியளவில் இருப்பு பாதை காவல் நிலையத்திற்குள் யாரையோ அடிப்பது போல சத்தம் கேட்டது என்றும் ஒரு ஆண் நபர் அடிதாங்க முடியாமல் ஐயோ அம்மா என்று அலறும் சத்தம் கேட்டது என்றும், நானும் மற்ற ஆட்டோ ஓட்டுனர்களும் சென்று ஜன்னல் வழியாக பார்த்தோம் என்றும், உடனே ஜன்னல் கதவுகளை மூடிவிட்டார்கள் என்றும், இரவு வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும், சொன்னேன் என்றால் சரியல்ல.

மறுநாள் 07.05.2014ந் தேதி காலை 6.45 மணியளவில் வந்தேன் என்றும், அப்போதும் தொடர்ந்துஅந்த அலறல் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது என்றும், கேட்கவே பாவமாக இருந்தது என்றும் காலை சுமார் 10 மணியளவில் இரயிலில் புத்தகம் விற்கும் ஜெயவேல் என்பவரை சட்டைஇல்லாமல் ஆய்வாளர், டிரைவர் திருக்குமரன் மற்றும் இரண்டு போலீஸ் கைதாங்கலாக தூக்கி கொண்டு வந்து காவல் நிலையத்தின் முன்புறத்தில் நின்ற ஒரு டாடா சுமோ வாகனத்தின் பின்பக்க சீட்டில் ஏற்றினார்கள் என்றும், சுமோ கார் வேகமாக புறப்பட்டது என்றும், அப்போது ஜெயவேல் லுங்கி மட்டும் கட்டியிருந்தார் என்றும் சட்டை இல்லை என்றும், தலை தொங்கிய நிலையில் இருந்தது என்றும் இதை நானும், டிரைவர்கள் மணிகண்டன், விஜயகுமார் மற்றும் சிலர் பார்த்தோம் என்றும், அந்த ஜெயவேலுவை கடந்த 4 வருடங்களாக நாங்கள் பார்த்திருக்கிறோம் என்றும் ஜெயவேலுவை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் இறந்து விட்டார் என்ற செய்தியும் அவரை இரவும் காலையிலும் தொடர்ந்து காவல் நிலையத்தார் தாக்கியதால் தான் அவர் இறந்திருக்ககூடும் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. பிறகு காவல் நிலையம் பரபரப்பாக காணப்பட்டது என்றும் பிறகு விழுப்புரம் மாஜிஸ்ட்ரேட், சிபிசிஐடி ஆய்வாளர் விழுப்புரம், பின்னிட்டு வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் ஆகியோர்கள் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், மேற்படி சங்கதிகளை வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை.**